உ

குகமயம்

வேலு மயிலுந் துணை.

பாண்டி நாட்டின்கண் வீற்றிருக்கின்ற

தனவைசியர் சீர்திருத்த

# நொண்டிச் சிந்து.

இது

தேவகோட்டை, அரு. பழ. லெ.

சின்ன லெட்சுமணன் செட்டியாரவர்கள்

குமாரன்

**பழநியப்ப செட்டியால்**

இயற்றப் பெற்று

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப் பெற்றது.

1914

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106

உ

குகமயம்

வேலு மயிலுந் துணை.

பாண்டி நாட்டின்கண் வீற்றிருக்கின்ற

தனவைசியர் சீர்திருத்த

# நொண்டிச் சிந்து.

இது

தேவகோட்டை, அரு. பழ. லெ.

சின்ன லெட்சுமணன் செட்டியாரவர்கள்

குமாரன்

பழநியப்ப செட்டியால்

இயற்றப் பெற்று

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப் பெற்றது.

1914

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU - INDIA

# சாற்றுக்கவிகள்.

தஞ்சை மாநகரைச் சார்ந்த கருந்தட்டான் குடி

வ.ர. முத்து. சபாபதி பிள்ளை யவர்களியற்றியது.

பாரான நிலமகளும் பாரதியாங் கலைமகளும்
பதிகொண் டோங்கும்
பேரான வையநதி பெருபாண்டி யினிற்றேவ
கோட்டை மன்னும்
ஏரான வணிகர்குல திலகமென்னும் இலக்குமண
னின்போ டீன்ற
சீராளன் பழநியப்பன் வழுத்துசிந்தைச் சிந்தைசெய்வார்
சிறப்புற் றாரே.

---

தஞ்சை மாநகரைச் சார்ந்த கருந்தட்டான்குடி

வ.ர. முத்து. இராமலிங்கம் பிள்ளை யவர்கள்

இயற்றியது.

மண்மிகுந் தேவ கோட்டையம் பதியில்
மாசிலா வணிகர்தங் குலத்திற்
குணமிகு சின்ன லெட்சுமணன் றவத்தாற்
குவலயம் போற்றவந் துதித்துப்
பணிமுடிக் கிடந்த பார்தனிற் பழநி
யப்பனுங் கல்வியிற் சிறந்தோன்
வணிகர்தங் குலத்துச் சிந்துநன் கிசைத்தான்
மற்றது நீடுவா ழியவே.

---

உ

குகமயம்.

வேலுமயிலுந்துணை.

# தனவைசியர் சீர்திருத்த
# நொண்டிச்சிந்து.

## சித்திவிநாயகர் காப்பு.

### வெண்பா.

தாலமிசைப் பாண்டித் தனவணிகர் சிந்துதனைக்
கோலமிசை நற்றமிழாம் கூறுதற்கு—ஞாலமிசை
மங்கையுமை தந்தகுக மைந்தனுக்கு முன்னுதித்த
ஐங்கரனே முன்னின் றருள்.

### நொண்டிச்சிந்து.

தெந்தின தினதினனா—தினனா
தெந்தின தினதின தினதினனா.

பாண்டிமன் னவர்நாட்டில்—நாமும்
பசுபதி யருளிய குகஷண்முக

ஆண்டவன் றன்னருளால்—அறமிகும்
*ஆறரை வருணத்தில் அவதரித்துப்

பார்தனில் வரிசைபெற—வயதைந்திற்
பள்ளியி லமர்ந்தே பிள்ளைகளுடன்

ஹரி ஹரி முதலாக—எண்சுவடி
அன்பாப் படித்திடுமுன் றொலையேற்றும்

பேச்சுகள் தாம்வரவே—சிங்கப்பூர்
பேர்பெறு பம்பாய்ரங் கோனரிக்கன்

தேசங்கள் முதலிலங்கை—ப்ரஞ்சுமுதற்
றேசங்க ளிலேசென்று வர்த்தகஞ்செய்யத்

தாயக மாகச்சொல்லி—நம்முடைய
தந்தைதா யாருடன் உறவினரும்

ஆசிகள் பலகூறி—விடைதர
அன்பாகச் சுதினத்திற் பிரயாணித்து

வண்டிதனி லேயேறி—மதுரைமார்க்கம்
வழுத்திய ஊர்களுக்கு ரயில்முதலாக்

கப்பல்களி லேசென்று—அந்தவூர்க்
கரைதனிற் றெய்வச்செய லாலிறங்கி

எதிர்கொள்ள வந்திருக்கும்—நம்முடைய
இனபந்து அல்லது கணக்காளருடன்

---

* ஆறரை-மூன்று.

காடியிற் றோனறி—நம்மினக்
கடையதாம் வணிகர்கள் மனையிற்சென்று

ஸ்நானஞ் செய்துவந்தே—உடைதரித்துச்
சரவண பவனெனுங் குகனைப்போற்றிப்

போஜன சாலையிற்போய்ப்—புதிதுள
போஜன முண்டுகர சுத்திசெய்து

தாம்பூலந் தானுங்கொண்டே—இரண்டொருநாள்
தங்கி யிருந்துகளைப் பாறுகையில்

அத்தேசப் பாஷைகற்க—நம்முடைய
ஆதியாந் தேசத்தாய்ப் பாஷையினால்

புத்தக மொன்றெழுதிப்—படிக்கும்படி
புகன்றுமே புத்தியுடன் உத்திகள்சொல்லப்

பெட்டியடிச் சிறுவனாகச்—சிலகாலம்
பிசகாமல் வேலைகளைப் பார்த்துவரவே

வட்டிகள் முதலாய—சிட்டைகளை
வரிசை வரிசையாகக் கற்பித்துவைத்த

உத்தமர்கள் தம்அன்பினால்—நாமுமே
உயர்வாகச் சிலகாலம் அடுத்தாளாய்

வேலைகள் தாம்பார்த்து—மதிப்புறவே
வேண்டிய பெரியநற் கடைகளுக்குத்

தானே மேலாளாய்ச்—சம்மதித்துத்
தக்க விதங்களாகச் சம்பளம்பேசிக்

கூட்டாளி யாயமர்ந்து—கொண்டுமுதல்
கொடுக்கல் வாங்கல்களும் தானடத்திச்

சம்பளச் சீட்டுப்படி—*அயநமாறும்
சமர்த்துடன் வேலைகள் நடத்தியபின்

புதுக்கணக் காளிடத்தில்—கணக்கிலுள்ள
புள்ளிகள் தவருமல் உள்ளதுகாட்டிக்

கணக்கையு மெழுதிவிட்டு—ஐந்தொகை
கண்டதொரு லாபமதால் கடிதம்வாங்கிச்

சம்பளமுஞ் சாமானும்—கணக்குப்படி
சரியாக வேயெடுத் தொருகடையில்

வட்டியின் நயமறிந்து—அதிகமாம்
வட்டியைப் பேசியே தான்கொடுத்துக்

கையெழுத் தெனுங்கடிதம்—வாங்கியே
கட்டுடன் பெட்டிதனில் வைத்துக்கொண்டு

வேண்டுமென்ற சாமான்கள்—விதவிதமாய்
விரும்பிய படிவாங்கிப் பெட்டியிலிட்டுக்

காசுப்பை கணக்குடனே—புறப்பட்டுக்
கப்பல் முதலாம்ரயில் களிமேலறி

---

* அயநமாறு-மூன்றுவருடம்.

அறந்தாங்கி முதலாக—உயர்திரு
ஆலவாய் திருச்சிமா ஞமதுரை

ஆகிய இடங்களிலே—நாமிக
அன்பா யிறங்கிவெகு சந்தோஷமுடன்

விடுதிவீட் டிற்சென்று—தரகரால்
வில்லடியி லுள்ளபடி சாமானிறக்கி

போஜனந் தானருந்தி—அந்தப்
பொதுவான விடுதிக்கு மகமைதந்து

வண்டிதனி லேயேறிச்—சாமானுடன்
வந்தோம் முதலாளி வீடுதன்னில்

காசுப்பை கணக்குடனே—ஐந்தொகை
கண்ட இலாபத்தின் கடிதமுடன்

நேசமாய்த் தான்கொடுத்துக்—கணக்குப்பார்த்து
நேர்ந்தசம் பளவோலை தனைவாங்கிச்

சாப்பிட்டுச் சொல்லிக்கொண்டு—சாமானுடன்
சரேலென் வேகம் வீடுவந்து

சேர்ந்த தினமுதலாய்—வேட்டல்
செய்ய வேண்டுமென்று முயற்சிசெய்து

பார்த்திட வோர்பெண்ணும்—அதுவும்
படிப்பை அறிந்திடாக் கன்னிகையாம்

அவ்வித கன்னிகையின்—விலையோ
அப்பா விராகனு ரூபிசமாம்

இவ்விதப் பெருந்தொகையைச்—சேகரிக்க
இருந்தசம் பளமுடன் கடன்வாங்கி

வேட்டலை நிறைவேற்றும்—நம்முடைய
விருத்தாந்தங் களைவே றொருவர்கேட்கின்

காறியே யுமிழ்ந்திடுவார்—நாமும்
கஷ்ட மடைந்துபெருந் தொகைகொடுத்து

வேட்டலை நிறைவேற்றி—நம்மால்
வேண்டிய செல்வுகளைச் செல்லாக்கிக்

காளிக்குச் சமமான—நம்மனைக்
கன்னிகை யாமணை மாதுடனே

கூடிச் சுகித்திருந்து—நாமுங்
கொண்டாடி யடைந்திடும் பயன்யாதோ

யாரேனும் அறிந்திருந்தால்—புத்திமான்காள்
அன்பாய் வரைந்துமே காட்டிடுவீர்

இனியுய்ய வேண்டுமாகில்—நம்மவர்
இருக்க வேண்டுநிலை வேறுளதே

அதையுமே செப்பிடுவேன்—புத்திமான்காள்
அன்பாய்ச் செவிகொடுத்துக் கேட்டுய்குவீர்

செந்திலான் துணையிருக்க—நாமுஞ்
செய்யும் வேலைகள் சிறந்திருக்க

இந்தவோர் வேட்டலாலே—இதுவரை
இருந்த இடந்தெரியா திருந்துவிட்டோம்

தந்திர மொன்றுகேட்பீர்—இனிமேலுந்
தரித்திர மணுகாத இடத்துய்குவீர்

எந்த விதமெனிலோ—இனத்தவர்காள்
எப்படிக் கூறுவேன் வாய்த்துணிவாய்

அந்த விதங்கேட்பின்—நம்மவர்
அடைந்திடும் பயனதை யாதெனலாம்

பிறந்ததோர் காலமுதல்—நம்மைப்
பிள்ளைப் பருவத்திலே பள்ளியில்வைத்து

அரிச்சுவடி முதலாக—எண்சுவடி
அன்பாகப் படிக்குமுன் தொலைக்கனுப்பிக்

கல்வியைக் குறைப்பதனால்—நாமுங்
கற்றவல் லோர்கள்முன்பு திட்டமதாய்ச்

சென்றிட மனம்நாணி—அவர்சொலும்
சிறிய மொழிகளுக்கும் உத்தரங்கொடா

திருந்திடல் வெட்கமன்றோ—இனிநாம்
இயற்கை அறிவுடனே செயற்கையறிவும்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST. TAMIL NADU - INDIA

பொருந்திடும் படியாக—யானும்
புகலுவேன் மதுரையம் பிகையருளால்

எப்படி என்றுகேட்பின்—நானும்
இளமையிற் பள்ளிதனிற் படித்தறிந்து

விவேகம் வளரநிக்கண்டு—நன்னூல்
மேவிய காரிகை பொருளணிகள்

அந்தாதி பிள்ளைத்தமிழ்—புராணங்கள்
அற்புத காவியம் பற்பலவும்

பத்துப் பாட்டுடனே—புறப்பொருள்வெண்
பாமாலை யொடுபுற நானூறும்

*உந்தி களிறு முதல்—ஈரேழ்
உரைத்திடுஞ் சித்தாந்த சாத்திரங்களும்

ஞானவா சிட்டமாதி—நூல்களும்
நல்லா சிரியரிடம் கற்றுணர்ந்து

தமிழ்வேத பாராயணம்—செய்து
சந்தேக மில்லாமல் சிந்தைதெளிந்து

பிறருக்கு மெடுத்துரைத்துச்—சபைகளில்
பெரியோர் மகிழ்ந்திடப் பிரசங்கித்துத்

தேர்ச்சி யடைந்தபின்பு—பற்பல
தேசாந் திரங்கள்சென்று பாஷைகள்கற்றுக்

* உந்திகளிறு-திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்,

தொழில்வகை பலதெரிந்து—நமக்கேற்ற
தொழில்களை நடத்தி யிலாபமேபெற்றுக்
கொண்டு முதல் மேன்மையுடன்—யாதொரு
குறைவுமில் லாமலே கப்பல்ரயில்
வண்டிகள் மிசையேறி—நமது
வாசஸ் தானமெனும் வீடுசேர்ந்து
இருந்திடச் சிலநாளில்—நம்குலம்
ஏடேற வொட்டாதிப் போதுநடக்கும்
வேட்டலின் முறைமறுத்து—நமக்குள்
வேண்டிய பெரியோரைத் துணைக்கொண்டு
கூடிய வரைமுறையா—யிரண்டாயிரங்
குறித்த விராகனுக்கு மேற்போகாமல்
ஆகிடுஞ் செலவினிலே—மன்றலும்
அன்புடன் நிறைவேற்றல் ஆமென்னில்
நாம்செய்பூ ஜாபலந்தான்—அல்லவெனில்
நம்மினத் தவர்பல பேருடனே
கூடியே யோசனைசெய்து—நம்மினக்
கூற்றுக்குச் சமமான கோதையரைப்
பெண்டாட்டி யாகக்கொண்டு—திண்டாடும்
பிழைப்புவேண் டாமென்று வழக்குரைத்துக்

கட்டுப் பாடுசெய்து—தனிமையிற்
காலங் கழித்துச்சில நாளிருந்தால்

பெண்களு மிருந்திடுவார்—அப்பால்நாம்
பேசிய படியாவு முடிந்துவிடும்

அப்படி முடியாவிட்டால்—புத்திமான்காள்
அன்பாயா னுரைத்திடுஞ் செய்திகேட்பீர்

நமக்கு அடுத்தவருணம்—அதனை
நான்காம் வருணமென்ப துலகியற்கை

அவ்வித வருணமதில்—புத்தியுள்ள
அருந்ததி நிகரான மங்கையர்களைப்

பார்த்தே மணம்பேசிச்—சுபதினத்தில்
பாங்கான லக்கினத்தில் மணம்பற்றிப்

பெரியோர்கள் ஆசிபெற்று—மணமகனும்
பெட்புள அருந்ததிநேர் மணமகளும்

கூடியே சுகித்திருக்கச்—சிலநாளில்
குமர குருபரன்ற னருளாலே

புத்திரப் பேறடைவோம்—அவர்களும்
புகழுடன் புவிமிசை வாழ்ந்திருப்பார்

நாமுங்கண் டுளமகிழ்ந்தே—இதமுடன்
நயந்தநல் வாசகம் புகன்றிடலாம்

இப்படிச் செய்வதுதான்—சாஸ்திரத்துக்
கேற்றதென் றுரைப்பார்கள் பெரியோர்கள்

ஆனதா லிதையுஞ்சொன் னேன்—புத்திமான்காள்
ஆராய்ச்சி செய்திடில் தெரியுநன்றாய்

அங்குச தரன்வாழி—உண்மையுடன்
அங்கணன் செந்திலா திபன்வாழி

அரியப்பன் மதிவாழி—தபனனா
டளைக் கதிபனுந் தான்வாழி

ஆதியாம் மறைவாழி—அந்தணர்
அரசர் வணிகர்சூத் திரர்வாழி

திருமகள் தன்னுடனே—பாரதி
தேவியுட னிப்புவி தான்வாழி.

தெந்தின தினதினனா—தினனா
தெந்தின தினதின தினதினனா.

நொண்டிச் சிந்து முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.